# செங்கல்பட்டு கிராமப்புற மேம்பாட்டுச் சங்கம்

## திம்மாவரம், செங்கல்பட்டு - 603 101

### 36 வது ஆண்டறிக்கை (01.04.2025 முதல் 31.03.2026)

**முன்னுரை:**

செங்கல்பட்டு கிராமப்புற மேம்பாட்டுச் சங்கம் 1990 - ஆம் ஆண்டு அரசின் சமூக சங்கங்களின் சட்டவிதிகளின்படி முறையாக பதிவு செய்யப்பட்டு கடந்த 36 ஆண்டுகளாக காஞ்சிபுரம் மற்றும் செங்கல்பட்டு மாவட்டங்களில் உள்ள கிராமப்புற ஏழை, எளிய மக்கள் மற்றும் மாற்றுத்திறனாளர்களின் வாழ்க்கை மேம்பாடு அடைய பல்வேறு சமூகப்பணிகளை தொடர்ந்து செய்து வருகின்றது. மேலும் செங்கல்பட்டு மற்றும் காஞ்சிபுரம் மாவட்டங்களில் உள்ள சமூகத்தில் மிகவும் நலிவடைந்த மற்றும் ஒடுக்கப்பட்ட பெண்கள், சிறார்கள், பழங்குடியினர் மற்றும் தலித் மக்களின் வாழ்வியல் முன்னேற்றத்திற்காக 2 மாவட்டங்கள், 10 ஒன்றியங்கள், 120 கிராமங்கள், 532 மகளிர் குழுக்கள், 7205 மகளிர்குழு உறுப்பினர்களை கொண்டு சிறப்பாக வழிநடத்தி வருகின்றது. மேலும் இவர்களுக்கு வாழ்வாதார பயிற்சி, தலைமைத்துவ பயிற்சி, தொழில் முனைவோர் பயிற்சி, அரசியல் பங்கேற்பு பயிற்சி, தனிநபர் மேம்பாட்டு பயிற்சி, வருமான பெருக்குத்திட்ட பயிற்சி, சுயதொழில் பயிற்சி என பல்வேறு பயிற்சிகளையும் அளித்து ஊக்குவித்து தொடர்ந்து வழிகாட்டியும் வருகின்றது. சி.ஆர்.டி.எஸ் நிறுவனத்தின் வழியாக கடந்த ஏப்ரல் மாதம் 2025 முதல் மார்ச் மாதம் 2026 வரையிலான விரிவான அறிக்கையினை உங்கள் அனைவரின் முன் சமர்பிப்பதில் பெருமகிழ்ச்சி அடைகின்றோம்.

**சி.ஆர்.டி.எஸ் நிறுவனத்தின் குறிக்கோள்:**

- தன்மானம்
- தன்னிறைவு
- தன்னாட்சி

**விருதுவாக்கு:**

நீதியுள்ள சமுதாயத்தை உருவாக்கிட...

**சி.ஆர்.டி.எஸ் நிறுவனத்தின் பணித்தளங்கள்:**

**மாவட்டங்கள்**: செங்கல்பட்டு, காஞ்சிபுரம்

**ஒன்றியங்கள்:**

- திருப்போரூர்
- திருக்கழுக்குன்றம்
- காஞ்சிபுரம்
- வாலாஜாபாத்
- உத்திரமேரூர்

- அச்சிறுப்பாக்கம்
- காட்டாங்கொளத்தூர்
- இலத்தூர்
- சித்தாமூர்
- மதுராந்தகம்

**சி.ஆர்.டி.எஸ் நிறுவனத்தில் செயல்படுத்தப்படும் திட்டங்கள்:**

1. மிவா ஆஸ்டிரியா (Miva Austria)
2. கோல்பிங் இந்தியா (Kolping India)
3. நாபின்ஸ் நுண்கடன் திட்டம் (Nabfins)
4. பெண்கள் கூட்டமைப்பு (Women Federation)
5. ஆக்ஷன் இந்தியன் திட்டம் (Aktion Indine)
6. இத்தாலி கத்தோலிக்க ஆயர் பேரவையின் (IBC) நலிவடைந்த பெண்களுக்கான சுகாதாரம் மற்றும் தொழிற்பயிற்சி திட்டம்

1. மாற்றுத்திறனாளிகளுக்கு நகரும் இருசக்கர நாற்காலி வழங்கும் திட்டம் - **மிவா ஆஸ்டிரியா (Miva Austria)**

மாற்றுத்திறனாளிகளுக்கு நகரும் இருசக்கர நாற்காலி வழங்கும் திட்டமானது மிவா ஆஸ்டிரியா **(Miva Austria)** வழிகாட்டுதலுடன் செயல்படுத்தப்படும் திட்டமாகும். இத்திட்டமானது நவம்பர் மாதம் தொடங்கப்பட்டது. செங்கல்பட்டு மற்றும் காஞ்சிபுரம் மாவட்டங்களில் உள்ள சுய உதவிக்குழுக்கள் மற்றும் செங்கல்பட்டு மறைமாவட்ட பங்குத்தளங்களில் கடும் ஊனத்தால் பாதிக்கப்பட்டு அரசின் மாற்றுத்திறனாளி சான்றிதழ் வைத்துள்ள 70 மாற்றுத்திறனாளிகளுக்கு இருசக்கர நகரும் நாற்காலிகள் அவர்களின் இல்லம் தேடி வழங்கும் பணி கடந்த நவம்பர் 2025 முதல் மார்ச் 2026 வரை 5 மாதங்களில் நடைபெற்றது.

**குறிக்கோள்:**

கடும் ஊனத்தால் பாதிக்கப்பட்டு குடும்பங்களாலும் சமுதாயத்தாலும் புறக்கணிக்கப்பட்டு வீட்டிலேயே ஒடிங்கி கிடக்கும் மாற்றுத்திறனாளிகளை வெளிகொணரவும் சமுதாயத்தில் அவர்களும் ஒரு அங்கத்தினராக மதிக்கப்பட இத்திட்டம் அமைந்துள்ளது.







இத்திட்டத்தின் மூலம் பயன்பெற்ற பயனாளர்களின் விவரம்:

| வ. எண் | பெயர் | கிராமம் | வ. எண் | பெயர் | கிராமம் |
|---|---|---|---|---|---|
| 1 | நாகூரான் | முட்டுக்காடு | 36 | முகேஷ் | ஆத்தூர் |
| 2 | மரியபிரகாசம் | பள்ளிப்பேட்டை | 37 | வின்சன் ஜோசப் | வேடபாளையம் |
| 3 | பீட்டர் குழந்தைசாமி | செய்யூர் | 38 | சிங்கராயன் | பாப்பநல்லூர் |
| 4 | இந்துமதி | சேம்புலிபுரம் | 39 | தேவிகா | வேடந்தாங்கல் |
| 5 | அன்னைச்செல்வம் | முத்துவேடு | 40 | கன்னியப்பன் | சோகண்டி |
| 6 | ஜோசப் சேவியர் | வடக்கு செய்யூர் | 41 | புஷ்பராணி | கே.கே.புதூர் |
| 7 | இமான் | நெல்வாய் | 42 | இயேசுமுத்து | சீவாடி |
| 8 | ஆம்ஸ்ட்ராங் | பாப்பநல்லூர் | 43 | மாரிமுத்து | கீழ்ப்பட்டு |
| 9 | பிரவீன்குமார் | மானாம்பதி | 44 | ஞானஅந்தோணிராஜ் | செங்காட்டூர் |
| 10 | லூர்துமேரி | சேம்புலிபுரம் | 45 | சவரிமுத்து | கரும்பாக்கம் |
| 11 | ஜோஸ்பினா | கயப்பாக்கம் | 46 | பாரத் | செய்யூர் |
| 12 | ஆனந்த் | நல்லூர் | 47 | சபரிபாலன் | உடல்காரகுப்பம் |
| 13 | சரினா | நல்லூர் | 48 | லாவண்யா | சிறுதாவூர் |
| 14 | முருகன் | வெண்புருஷம் | 49 | சாந்தகுமார் | தென்னேரி |
| 15 | மரியாள் | ரெட்டிபாளையம் | 50 | சேட்டு | தென்னேரி |
| 16 | அற்புதமேரி | உத்தமநல்லூர் | 51 | தாஸ் | தென்னேரி |
| 17 | மரிய ஜோசப் | புலிப்பாக்கம் | 52 | தயாநிதிமாறன் | கட்டவாக்கம் |
| 18 | பிரியங்கா | இருங்குன்றப்பள்ளி | 53 | பிரதேஷ் | தர்மநாயக்கன்பட்டரை |
| 19 | விக்டோரியா செல்வி | கூத்தவாக்கம் | 54 | ப்ரீத்தி | நல்லூர் |
| 20 | குணசேகரன் | நல்லூர் | 55 | சின்னப்பன் | தென்னேரி |
| 21 | சிவா | A.P.சத்திரம் | 56 | கிருஷ்ணமூர்த்தி | தென்னேரி |
| 22 | டில்லிபாபு | சிறுவாக்கம் | 57 | செல்வராஜ் | பூந்தண்டலம் |
| 23 | முனுசாமி | ஏனாத்தூர் | 58 | பிரமிளா | புலியூர் |
| 24 | சாய்ஸ்வத்திகா | சிறுவள்ளூர் | 59 | மைக்கேல்ராஜ் | பிச்சைவாடி |
| 25 | தாமஸ் | மல்லிகாபுரம் | 60 | லிங்கேஸ்வரன் | தென்னேரி |
| 26 | தர்ஷினி | நல்லாத்தூர் | 61 | மோகன் | குன்னம் |
| 27 | கமலவள்ளி | ஒரகடம் | 62 | நளினி | மாம்பாக்கம் |
| 28 | சுபத்ரா | புதுப்பட்டினம் | 63 | ஷவின் | மாம்பாக்கம் |
| 29 | எல்லப்பன் | மேலப்பாளையம் | 64 | மகிமைதாஸ் | எலப்பாக்கம் |
| 30 | சுபாஷ் | உத்தமநல்லூர் | 65 | ருக்குமணி | கீழாமூர் |
| 31 | சுஜாதா | புலிப்பாக்கம் | 66 | அம்புரோஸ் | எலப்பாக்கம் |
| 32 | சுகுணா | செம்பாக்கம் | 67 | பிலோமினா | கரும்பாக்கம் |
| 33 | பிரகாஷ் | விப்பேடு | 68 | கன்னியம்மாள் | மேல்மணப்பாக்கம் |
| 34 | ஹரிகரன் | விஷார் | 69 | கணேஷ் | ரெட்டிபாளையம் |
| 35 | விபிஷ் | மானாம்பதி கண்டிகை | 70 | அஷ்மிதா | செங்கல்பட்டு |

## 2. கோல்பிங் இந்தியா திட்டம்:

செங்கல்பட்டு கிராமப்புற மேம்பாட்டுச் சங்கத்தின் ஓர் அங்கமாக அகில உலக கத்தோலிக்க திருச்சபையின் மக்கள் செயல்பாட்டு நிறுவனமான “கோல்பிங் இயக்கம்” கடந்த 22 அண்டுகளுக்கும் மேலாக நமது மறைமாவட்டத்திலுள்ள 46 பங்குகளில் 78 கோல்பிங் குழுக்கள் உருவாக்கப்பட்டு இதில் 1110 நபர்கள் உறுப்பினர்களாக இணைக்கப்பட்டுள்ளனர்.



இத்திட்டத்தின் வழியாக கடந்த 22 ஆண்டுகளில் வருவாய் பெருக்குத் திட்டத்திற்கு கடன் பெற்று இதுவரை 1541 நபர்கள் சுழற்சி முறையில் கடன்பெற்று பயன்பெற்றுவருகின்றனர்.

இதுவரை அவர்களுக்கு கோல்பிங் இந்தியா நிறுவனத்தின் வழியாக அளிக்கப்பட்டுள்ள கடன்தொகை மொத்தம் ரூ.1,42,49,850.00 (ரூபாய். ஒரு கோடியே நாற்பத்தி இரண்டு இலட்சத்து நாற்பத்தி ஒன்பதாயிரத்து எண்ணூற்று ஐம்பது) ஆகும்.

**குறிக்கோள்:**

கோல்பிங் உறுப்பினர்கள் பொறுப்புள்ள மனிதர்களாகவும், பொறுப்புள்ள குடும்ப உறுப்பினர்களாகவும், தகுதிவாய்ந்த சுதந்திரமான உழைப்பாளர்களாகவும், பொறுப்புள்ள சமூக உறுப்பினர்களாகவும் விளங்கிட வேண்டும் என்பதுதான் இத்திட்டத்தின் தலையாய குறிக்கோளாக உள்ளது.

**நோக்கம்:**

கோல்பிங் உறுப்பினர்கள் அனைவரையும் ஆன்மீகத்தோடு இணைந்த பொருளாதார முன்னேற்றத்தில் தன்னிறைவை நோக்கி பயணிக்கச் செய்தல்.

**கோல்பிங் திட்டத்தின் வழியாக நிறைவேற்றப்படும் திட்டங்கள்:**

- வருவாய் பெருக்குத்திட்டம் (Income Generation Programme)
- கூட்டுவருவாய் பெருக்குத்திட்டம் (Collective Income Generation Programme)
- கறவைமாடு வளர்ப்புத்திட்டம் (Milch Animal Programme)
- வீடுகட்டும் திட்டம் (Housing Support Programme)
- தொழிற்பயிற்சி கல்வித்திட்டம் (Vocational Training Programme)
- தனிநபர் கழிவறைத்திட்டம் (Individual Toilet Programme)

**வருவாய் பெருக்குத் திட்டம்**

கோல்பிங் குழு உறுப்பினர்கள் சுயதொழிலை துவங்கவும், அல்லது ஏற்கனவே செய்துவரும் தொழிலை விரிவுப்படுத்தவும் இக்கடன் உறுப்பினர்களுக்கு வழங்கப்படுகிறது.

2025 – 2026 ம் ஆண்டில் கோல்பிங் வருவாய் பெருக்குத் திட்டத்தின்(IGP) வழியாக பயனடைந்த பயனாளிகளின் விவரம்:

**வருமான பெருக்குத் திட்டத்தில் கடன் பெற்றவர்கள்:**

| வ. எண் | பங்கு | கிராமம் | குழுவின் பெயர் | தொகை |
|---|---|---|---|---|
| 1 | விப்பேடு | விப்பேடு | மாதா கோல்பிங் குழு | 1,00,000.00 |
| 2 | தச்சூர் | தச்சூர் | மழைமலைமாதா | 1,00,000.00 |
| 3 | ஆத்தூர் | மேல்மணப்பாக்கம் | சிகரம் கோல்பிங் குழு | 1,00,000.00 |
| 4 | நேமம் | நேமம் | அன்னை பாத்திமா | 1,00,000.00 |
| 5 | நேமம் | நேமம் | அன்னை தெளலத் | 1,00,000.00 |
| 6 | கே.கே.புதூர் | கே.கே.புதூர் | அம்பேத்கர் கோல்பிங் | 1,00,000.00 |
| 7 | கோவளம் | கோவளம் | புனித கார்மேல் அன்னை | 1,00,000.00 |
| 8 | வேடந்தாங்கல் | வேடந்தாங்கல் | தமிழ் அருவி கோல்பிங் | 1,00,000.00 |
| 9 | ஒரகடம் | கழனிப்பாக்கம் | டாக்டர். அம்பேத்கர் | 1,00,000.00 |

| | | | | |
|---|---|---|---|---|
| 10 | தச்சூர் | தச்சூர் | கார்மேல் மாதா | 1,00,000.00 |
| 11 | விப்பேடு | விப்பேடு | விண்மீண் கோல்பிங் | 1,00,000.00 |
| 12 | சகாயபுரம் | சகாயபுரம் | வனத்து சின்னப்பர் | 1,00,000.00 |
| 13 | ஒட்டியம்பாக்கம் | ஒட்டியம்பாக்கம் | சகாய அன்னை | 1,00,000.00 |
| 14 | வேடந்தாங்கல் | வேடந்தாங்கல் | பறவைகள் சரணாலயம் | 1,00,000.00 |
| 15 | செங்கல்பட்டு | செங்கல்பட்டு | அமுத சுரபி | 1,00,000.00 |
| 16 | செல்லம்பட்டிடை | செல்லம்பட்டிடை | புனித காணிக்கை மாதா | 1,00,000.00 |
| 17 | ஒரகடம் | ஒரகடம் | ஆரோக்கிய மாதா | 1,00,000.00 |
| 18 | ஒரகடம் | ஒரகடம் | சகாய மாதா கோல்பிங் | 1,00,000.00 |
| 19 | ஒரகடம் | ஒரகடம் | லூர்து மாதா கோல்பிங் | 1,00,000.00 |
| 20 | காஞ்சிபுரம் | வையாவூர் | கலசம் கோல்பிங் | 1,00,000.00 |
| 21 | ஒட்டியம்பாக்கம் | ஒட்டியம்பாக்கம் | சகாய அன்னை | 1,00,000.00 |
| 22 | காஞ்சிபுரம் | அய்யம்பேட்டை | திருமுழுக்கு யோவான் | 1,00,000.00 |
| **மொத்தம்** | | | | **22,00,000.00** |





**கோல்பிங் திட்டத்தின் வழியாக வழங்கப்படும் பயிற்சிகள்:**

- கிராம அளவில் திட்ட அறிமுகம்
- கிராம அளவில் புதிய குழுக்களுக்கான கருத்து பகிர்வு
- சேமிப்பு மற்றும் கடன் மேலாண்மை பயிற்சி
- தலைமைத்துவ பயிற்சி
- புத்தக பராமரிப்பு பயிற்சி
- வாழ்க்கைத்திறன் மேம்பாட்டு பயிற்சி
- சுகாதார விழிப்புணர்வு பயிற்சி
- தொழில்முனைவோர் பயிற்சி
- சுற்றுச்சூழல் மேலாண்மை பயிற்சி
- கிராம அளவிலான கோல்பிங் கூட்டமைப்பு பயிற்சி
- தொழில் வாய்ப்புகளை கண்டறிதல்
- கிராம மக்கள் பங்களிப்புடன் கூடிய பகுப்பாய்வு செய்தல்
- பஞ்சாயத்து அமைப்பு மற்றும் வலைப்பின்னல் பயிற்சி
- வழக்காடுதல் மற்றும் மனித உரிமைகள்
- கிராம திட்டமிடல் கூட்டம்
- வீட்டுத்தோட்டம் மற்றும் சமூக காடுகள் திட்டம்

- மரக்கன்றுகள் நடுதல் மற்றும் பாதுகாத்தல்
- பாரம்பரிய தொழில்களின் சாதக பாதக நிலைப்பாடுகள்

**கோல்பிங் உறுப்பினர்களின் வளர்ச்சிகள்:**

- கிராமத்தில் பின்தங்கிய மக்கள் கோல்பிங் வழியாக குழுக்களாக இணைக்கப்படுகின்றனர்.
- சேமிக்கும் பழக்கம் ஏற்படுத்தப்பட்டு ரூ.100 முதல் ரூ.1000 வரை சேமிக்கின்றனர்.
- சமூக ஈடுபாடுகளில் கவனம் செலுத்துகின்றனர்.
- பொருளாதார முன்னேற்றம் காண முடிகின்றது.
- திட்டத்தின் பயிற்சிகளில் கலந்துக்கொள்வதன் மூலம் தனிநபர், குடும்பம், குழு, கிராமங்களின் இன்றைய சூழல்கள் பற்றி தெரிந்து கொள்கின்றனர்.
- தனிநபர் தொழிற்பயிற்சி மூலம் சுய தொழில் செய்வோர் அதிகரித்துள்ளனர்.

**கோல்பிங் இறப்பு நிதி:**

கோல்பிங் இயக்க உறுப்பினர்கள் இயற்கை மற்றும் விபத்துக்கள் காரணமாக இறக்க நேரிட்டால் அவர்களின் குடும்பத்திற்கு கோல்பிங் இறப்புநிதி வழியாக ரூ.5000 காசோலையாக வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின் வழியாக இவ்வாண்டு 4 பயனாளிகளுக்கு மொத்தம் ரூ. 20,000 வழங்கப்பட்டது. பயன்பெற்றவரின் விவரம் பின்வருமாறு:

| வ. எண் | பங்கு/கிராமம் | குழு பெயர் | பயனாளி | தொகை |
|---|---|---|---|---|
| 1 | இருகுன்றபள்ளி | செம்பருத்தி | ஆதிலட்சுமி | ரூ. 5000.00 |
| 2 | தச்சூர் | மழைமலை மாதா | அஜந்தாமேரி | ரூ. 5000.00 |
| 3 | பையனூர் | லீலிமலர் கோல்பிங் | உத்திரமேரி | ரூ. 5000.00 |
| 4 | உத்தமநல்லூர் | புனித அந்தோணியார் | பாக்கியம் | ரூ. 5000.00 |

**சிறப்பு செயல்பாடுகள்:**

**சுற்றுச்சூழல் மேலாண்மை விழிப்புணர்வு பேரணி:**


சுற்றுச்சூழல் மேலாண்மை குறித்த விழிப்புணர்வு பேரணி மற்றும் பொதுக்கூட்டம் நேமம் மற்றும் முத்துவேடு கிராமங்களில் நடத்தப்பட்டது. இந்நிகழ்வில் 180க்கும் மேற்பட்ட கிராம பொதுமக்கள் பங்கேற்றனர். அவர்களுக்கு மரக்கன்றுகள் வழங்கப்பட்டது.



**குழு ஊக்க நிதி:**

தனிநபர் கைவினைப்பொருட்கள் செய்யும் கோவளம் புனித கார்மேல் அன்னை கோல்பிங் குடும்பத்தில் 5 நபர்கள், சாலவான்குப்பம் பகுதியில் செயல்படும் காமராஜர் கோல்பிங் குழு செயல்பாடுகளை ஊக்கப்படுத்தும் நோக்கத்தில் செம்பருத்தி கோல்பிங் குழு, காமராஜர் கோல்பிங் குழு இந்த இரண்டு குழுக்களுக்கு ஊக்கநிதியாக குழுவிற்கு ரூ. 10,000 காசோலையாக கோல்பிங் தேசிய அலுவலகம் வழியாக வழங்கினார்கள்.

**வாழ்வாதார மேம்பாடு சிறப்பு திட்டம் - ஆடு வளர்ப்பு:**



மிகவும் பின்தங்கிய நிலையிலுள்ள கோல்பிங் குழு உறுப்பினர்கள் தங்களது வருமான பெருக்கு கூடுதலாக வேண்டும் என்ற நோக்கத்தில் 10 பயனாளிகளுக்கு ஆடு வளர்ப்பு செய்ய கோல்பிங் இந்தியா நிறுவனம் நபருக்கு ரூ. 10,000 என வழங்கியது. அத்தொகையில் ரூ. 5,000 மானியமாகவும் ரூ.5,000 கோல்பிங் இந்தியா நிறுவனத்திற்கு திரும்ப செலுத்த வேண்டிய கடன் தொகையாகவும் உள்ளது. இவ்வாறு இந்த சிறப்பு திட்டத்தின் அடிப்படையில் கடன் பெற்றவர்கள் விவரம்

| வ. எண் | பங்கு | கிராமம் | குழு பெயர் | பயனாளி | கடன் தொகை |
|---|---|---|---|---|---|
| 1 | மருதம் | மருதம் | மருதம் | கிஸஸ்து ராணி | 10,000 |
| 2 | ஒரகடம் | ஒரகடம் | லூர்து மாதா | ராக்கினி | 10,000 |
| 3 | உத்தமநல்லூர் | உத்தமநல்லூர் | அந்தோணியார் | சுமதி மேரி | 10,000 |
| 4 | அகிலி | அகிலி | ரோஜா | ரோஷினி | 10,000 |
| 5 | பெருங்கோழி | பெருங்கோழி | புனித சூசையப்பர் | பிரேமா | 10,000 |
| 6 | பெருங்கோழி | பெருங்கோழி | ஆரோக்கிய மாதா | ஆரோக்கியமேரி | 10,000 |
| 7 | நேமம் | நேமம் | புனித அந்தோணியார் | செலின் ஜெசிந்தா | 10,000 |
| 8 | அகிலி | அகிலி | ரோஜா | தமிழ்செல்வி | 10,000 |
| 9 | காஞ்சிபுரம் | வையாவூர் | பனிமலர் | ரஞ்சிதம் | 10,000 |
| 10 | விப்பேடு | விப்பேடு | புனித அந்தோணியார் | வசந்தா | 10,000 |
| **மொத்தம்** | | | | **1,00,000.00** | |

**3. நாபின்ஸ் நுண்கடன் திட்டம்: (Nabfins)**



நாபின்ஸ் நுண்கடன் திட்டமானது கடந்த 2017 ஆம் ஆண்டுமுதல் 9 ஆண்டுகளாக சி.ஆர்.டி.எஸ் நிறுவனத்துடன் இணைந்து நபார்டு வங்கியின் மூலம் நிதி உதவி பெற்று செங்கல்பட்டு, காஞ்சிபுரம் ஆகிய

இரண்டு மாவட்டங்களில் 10 ஒன்றியங்களில் உள்ள ஏழை, எளிய கிராமப்புற மக்களுக்கு கடனுதவி வழங்கி பொருளாதாரத்தில் மேம்பாடு அடைய வழிகாட்டி வருகிறது. இக்கடனுதவித்தொகையானது மகளிர் குழுக்கள் (SHG) மற்றும் குழுக்கள் அல்லாத கூட்டு பொறுப்பு குழு (JLG) உறுப்பினர்களுக்கு அவர்கள் விரும்பும் தொழில்செய்து வருமானத்தை பெருக்கிக்கொள்ளவும், விவசாயம் போன்ற உற்பத்தி செயல்பாடுகளை ஊக்குவித்து பெண்களை தொழில் முனைவோராக மாற்றும் நோக்கத்திற்காக வழங்கப்பட்டு வருகிறது. இவ்வாறு சி.ஆர்.டி.எஸ் நிறுவனத்தின் வழிகாட்டுதலின் கீழ் செயல்பட்டு வரும் மகளிர் குழுக்கள் மற்றும் சி.ஆர்.டி.எஸ் நிறுவனத்தின் பணித்தள கிராமங்களில் உள்ள கூட்டு பொறுப்புக்குழு உறுப்பினர்களுக்கு தொழில் நோக்கத்திற்காக கடந்த ஓராண்டில் நாபின்ஸ் நுண்கடன் திட்டத்தின் மூலம் ஒன்றியம் வாரியாக பெற்றுத்தரப்பட்ட கடனுதவித்தொகை மொத்தம் **ரூ.4,22,75,000 (நான்கு கோடியே இருபத்து இரண்டு லட்சத்து ஏழபத்தி ஐந்து ஆயிரம்**) ஆகும். விவரம் பின்வருமாறு:

| **வ. எண்** | **ஒன்றியம்** | **களப்பணியாளர் பெயர்** | **குழுக்களின் எண்ணிக்கை** | **உறுப்பினர் எண்ணிக்கை** | **பெறப்பட்ட கடன் தொகை** |
|---|---|---|---|---|---|
| 1 | திருப்போரூர் 1 | திருமதி. ராஜேஸ்வரி | 14 | 70 | 50,90,000 |
| 2 | திருப்போரூர் 2 | திருமதி. சவுரியம்மாள் | 1 | 5 | 3,90,000 |
| 3 | வாலாஜாபாத் | திருமதி. ஜோஸ்பின் | 10 | 49 | 39,45,000 |
| 4 | காஞ்சிபுரம் | திருமதி. ஜீலியட் ஜரின் | 11 | 59 | 53,05,000 |
| 5 | உத்திரமேரூர் 1 | திருமதி. ஜெயசீலி | 11 | 51 | 36,45,000 |
| 6 | உத்திரமேரூர் 2 | திருமதி. கமலா | 5 | 20 | 13,30,000 |
| 7 | காட்டாங்கொளத்தூர் | திருமதி. வசந்தா | 13 | 60 | 39,65,000 |
| 8 | திருக்கழுக்குன்றம் | திரு. செல்வம் | 6 | 36 | 33,75,000 |
| 9 | அச்சிறுப்பாக்கம் 1 | திரு. வேளாங்கண்ணி | 9 | 38 | 30,15,000 |
| 10 | அச்சிறுப்பாக்கம் 2 | திருமதி. ஸ்டெல்லா | 9 | 53 | 44,50,000 |
| 11 | இலத்தூர் | திருமதி. ராஜகுமாரி | 17 | 84 | 65,25,000 |
| 12 | சித்தாமூர் (ம) மதுராந்தகம் | திரு. ஜான்சன் | 4 | 19 | 12,40,000 |
| **மொத்தம்** | | | **110** | **544** | **4,22,75,000** |

## 4. பெண்கள் கூட்டமைப்பு:



தமிழக சமூகப்பணி மையம் (டாசோஸ்) வழிகாட்டுதலுடன் காஞ்சிபுரம், செங்கல்பட்டு மாவட்டங்களில் 10 ஒன்றியங்களில் உள்ள பெண்கள் ஒருங்கிணைக்கப்பட்டு தற்போது செங்கல்பட்டு, காஞ்சிபுரம் இரண்டு மாவட்ட கூட்டமைப்பு பொறுப்பாளர்களைக்கொண்டு தனித்தனி இயக்கங்களாக செயல்பட்டு வருகிறது.

இவ்வியக்கங்கள் பெண்களின் வாழ்வாதாரம், பொருளாதாரம், மற்றும் உரிமைகளை மீட்டெடுக்கும் நோக்கத்திற்காக துவங்கப்பட்டு 120 கிராமங்களில் 532 குழுக்களுடன் 7205 உறுப்பினர்களைக் கொண்டு இயங்கி வருகிறது.

**இயக்கத்தின் நோக்கம்:**

- சமுதாய வறுமைக்கோட்டிற்கு கீழுள்ள, ஒடுக்கப்பட்ட பெண்கள் ஒன்றுபட்டு சமூக, பொருளாதார அரசியல், கல்வி, கலாச்சாரம் மற்றும் சட்ட ரீதியான நிலைகளில் முழு ஈடுபாடு கொண்டு வாழ்வில் முன்னேற துணைபுரிதல்.
- பெண்களிடையே கூட்டமைப்பின் முக்கியத்துவம் மற்றும் விழிப்புணர்வு ஏற்படுத்தி பெண்களுக்கான உரிமைகளை பெறவும், சமுதாய முன்னேற்றத்திற்கு வழிகாட்டவும் ஆர்வத்தை ஏற்படுத்துதல்.
- சமூக பிரச்சினைகளின் அடிப்படை காரணங்களை ஆராய்ந்து அவற்றை தவிர்ப்பதற்காக வழிவகுத்தல்.
- அரசு அதிகாரிகளுடன் சமூக உறவை ஏற்படுத்தி பெண்களுக்கு தேவையான உதவிகள் மற்றும் சலுகைகளையும் அரசிடமிருந்து பெற்றுத்தருதல்.
- சமூகத்தில் நலிவுற்ற பெண்களின் நிலையை உயர்த்தவும், அரசியலிலும், நிர்வாக பொறுப்புகளிலும் பெண்கள் பங்கெடுக்கவும் கூட்டமைப்பு உறுப்பினர்களை வலுப்படுத்துதல்.
- பெண்களின் முன்னேற்றத்திற்காக உழைக்கும் ஒத்த சிந்தனையுள்ள பிற அமைப்புகளுடன் இணைந்து செயல்படுதல்.
- அரசு வங்கிகள் மற்றும் தனியார் நிதி நிறுவனங்களின் மூலம் நேரடிக்கடன் பெற்று சுயதொழில் செய்து பெண்களை வாழ்வாதாரத்தில் உயர்த்துதல்.
- பெண்களுக்கு பாலின சமத்துவத்தின் முக்கியத்துவத்தை அறிய செய்து பெண்களை சுயசார்பு நிலைக்கு உயர்த்துதல்.
- பெண்களின் பாதுகாப்பை உறுதி செய்தல்.

**செங்கல்பட்டு, காஞ்சிபுரம் மாவட்ட கூட்டமைப்புகளின் கீழ் செயல்படும் குழுக்களின் விவரம்:**

| வ.எண் | ஒன்றியம் | பணியாளர் பெயர் | பஞ்சாயத்து | கிராமம் | குழுக்கள் | உறுப்பினர் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|---|
| 1 | திருப்போரூர் | திருமதி. ராஜேஸ்வரி | | 7 | 44 | 562 |
| | திருப்போரூர் | திருமதி. சவுரியம்மாள் | | | | |
| 2 | உத்திரமேரூர் | திருமதி. ஜெயசீலி | | 7 | 30 | 398 |
| | உத்திரமேரூர் | திருமதி. கமலாமேரி | | 8 | 36 | 467 |
| 3 | காட்டாங்கொளத்தூர் | திருமதி. வசந்தா | | 10 | 23 | 280 |
| 4 | வாலாஜாபாத் | திருமதி. ஜோஸ்பின் | | 5 | 52 | 642 |
| 5 | இலத்தூர் (ம) மதுராந்தகம் | திருமதி. ராஜகுமாரி | | 10 | 51 | 734 |
| 7 | சித்தாமூர் (ம) மதுராந்தகம் | திரு. ஜான்சன் | | 14 | 49 | 684 |
| 8 | காஞ்சிபுரம் | திருமதி. ஜீலியட் ஐரின் | | 14 | 67 | 890 |
| 9 | திருக்கழுக்குன்றம் | திரு. செல்வம் | | 11 | 41 | 560 |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 10 | அச்சிறுப்பாக்கம் | திரு. வேளாங்கண்ணி | | 6 | 32 | 482 |
| | அச்சிறுப்பாக்கம் | திருமதி. ஸ்டெல்லாமேரி | | 13 | 38 | 574 |
| 11 | கடற்கரை பகுதி | திரு. அல்போன்ஸ் | | 7 | 41 | 562 |
| மொத்தம் | | | | 120 | 532 | 7205 |

**சி.ஆர்.டி.எஸ் பெண்கள் கூட்டமைப்புகளின் வழியாக ஒன்றியம் வாரியாக நேரடிக்கடன் பெற்ற குழுக்களின் விவரம்:**

| வ.எண் | ஒன்றியம் | குழுக்கள் | கடன்தொகை |
|---|---|---|---|
| 1 | திருக்கழுக்குன்றம் | 2 | 17,40,000 |
| 2 | வாலாஜாபாத் | 5 | 56,00,000 |
| 3 | சித்தாமூர் | 4 | 79,50,000 |
| 4 | அச்சிறுப்பாக்கம் | 10 | 1,37,00,000 |
| 5 | கடற்கரைப்பகுதி | 3 | 35,80,000 |
| **மொத்தம்** | | **24** | **3,25,70,000** |

**சி.ஆர்.டி.எஸ் பெண்கள் கூட்டமைப்புகள் வழியாக அரசு திட்டங்கள் பெற்றவர்கள்:**

| வ.எண் | அரசு திட்டங்கள் | பயனாளிகள் |
|---|---|---|
| 1 | மாற்றுத்திறனாளிகள் திட்டம் | 1 |
| 2 | அரசு இலவச பட்டா | 4 |
| **மொத்த பயனாளிகள்** | | **5** |

**சி.ஆர்.டி.எஸ் அகில உலக பெண்கள் தினவிழா சிறப்பிக்கப்பட்ட நாட்கள் (07.03.2026, 17.03.2026, 21.03.2026)**



மார்ச் மாதம் 07.03.2026 அன்று சி.ஆர்.டி.எஸ் - ன் அகில உலக பெண்கள் தின விழாவானது திருக்கழுக்குன்றம் ஒன்றியம் புனித தொன்போஸ்கோ தொழில்நுட்ப கல்லூரியில் நடைபெற்றது. இவ்விழாவில் திருக்கழுக்குன்றம், கடற்கரை பகுதி, லத்தூர், திருப்போரூர், மதுராந்தகம் ஆகிய ஒன்றியங்களில் உள்ள மகளிர் குழு உறுப்பினர்கள் கலந்து கொண்டனர். **“பெண்களின் பங்கேற்பும், பங்களிப்பும்”** என்னும் தலைப்பில் சிறப்பு அழைப்பாளர்கள் சிறப்புரை ஆற்றினார்கள். இந்நிகழ்வில் செங்கல்பட்டு மறைமாவட்ட ஆயர் மேதகு. டாக்டர். நீதிநாதன், ஆயரின் பொதுபதில் குரு பேரருட்பணி. எஸ்தாக்கியுஸ், திருமதி. மைக்கேல் அம்மாள், சி.ஆர்.டி.எஸ் இயக்குநர் மற்றும் களப்பணியாளர்கள் கலந்துகொண்டு விழாவினை

சிறப்பித்தனர். தொடர்ந்து அச்சிறுப்பாக்கம், சித்தாமூர், காட்டாங்கொளத்தூர் ஆகிய ஒன்றியங்களை சேர்ந்த மகளிர் குழு உறுப்பினர்கள் இணைந்து செங்கல்பட்டு ஆயர் இல்ல வளாகத்தில் உள்ள மேய்ப்பு பணி மையத்தில் 17.03.2026 அன்று பெண்கள் தின விழாவை சிறப்பித்தனர். இவ்விழாவிற்கு திருமதி. தென்றல் அரசி அவர்கள் கலந்து கொண்டு பெண்களுக்கான பங்களிப்பும் பங்கேற்பும் என்ற தலைப்பில் சிறப்புரை ஆற்றினார்கள். இதனை தொடர்ந்து காஞ்சிபுரம், வாலாஜாபாத், உத்திரமேரூர் ஆகிய ஒன்றியங்களில் இருந்து மகளிர் குழு உறுப்பினர்கள் இணைந்து 21.03.2026 அன்று மகளிர் தின விழாவை சிறப்பித்தனர். இந்நிகழ்வில் சிறப்பு அழைப்பாளாராக திருமதி. சுமதி அன்பரசு அவர்கள் சிறப்புரை ஆற்றினார்கள் அகில உலக பெண்கள் தின விழாவில் சி.ஆர்.டி.எஸ் பணித்தளங்களில் இருந்து சுமார் 1500 மகளிர் குழு உறுப்பினர்கள் பங்கேற்றனர்.





### 5. ஆக்ஷன் இந்தியன் திட்டம் (Aktion Indine)

### 1. டாக்டர். ஆர். அருளப்பா மேல்நிலைப்பள்ளி, நீர்பெயர்

ஜெர்மனியின் ஆக்ஷென் இந்தியன் மற்றும் சி.ஆர்.டி.எஸ் நிறுவனம் இணைந்து ஏழை எளிய மற்றும் விளிம்புநிலை குடும்பங்களில் உள்ள குழந்தைகளின் பள்ளி கல்வியில் முன்னேற்றம் அடைய அவர்களுக்கு நிதியுதவி செய்து வழிவகுக்கிறது. இதனால் இப்பள்ளியை சுற்றியுள்ள கிராமங்களில் உள்ள ஏழை எளிய குழந்தைகளின் கல்வி இடைநிற்றல் மிகவும் குறையும். மேலும் இப்பள்ளியில் உள்ள ஆசிரியர்களின் மாத ஊதியம் இத்திட்டத்தின் வழியாக வழங்கப்படுகிறது.

### 2. புனித ஜான் சிறார்கள் உண்டு உறைவிட இல்லம்

புனித ஜான் ஏழை எளிய விடுதி, டாக்டர். ஆர். அருளப்பா மேல்நிலைப்பள்ளியில் பயிலும் மிகவும் ஏழை, எளிய மற்றும் கைவிடப்பட்டோர்களுக்கான இல்லம். இவ்விடுதியின் மொத்த பராமரிப்பு செலவு ஆக்ஷன் இந்தியன் திட்டம் பொறுப்பேற்றுக் கொள்கிறது. சிறார்களுக்கான உணவு, உறைவிட பராமரிப்பு, பணியாளர்களுக்கான ஊதியம் போன்றவை அடங்கும்.

**3. சிறார்களுக்கான புதிய கழிவறை கட்டிடப்பணி**

பள்ளியில் பயிலும் சிறார்களுக்கு மேம்படுத்தப்பட்ட கழிவறை வசதி மிகவும் அவசியம் எனக் கருதி இத்திட்டத்தின் வழியாக புதியதாக கட்டப்பட திட்டமிடப்பட்டு தற்போது பணிகள் துவங்கப்பட்டு கட்டுமான பணிகள் நடைபெற்றுக் கொண்டு இருக்கின்றது.

**4. பள்ளி புனரமைப்பு பணி:**

மாணவர்கள் பயிலும் பள்ளிகள் புனரமைப்பு பணிகாக ஆக்ஷன் இந்தியா திட்டம் நிதியுதவி செய்து வருகின்றது. இந்தாண்டு நடுநிலைப்பள்ளி மற்றும் மேல்நிலைப்பள்ளி வளாகங்கள் புதிய வண்ணங்கள் பூசப்பட்டும் புனரமைப்பும் செய்து பள்ளி மாணவர்கள் இடையூறு இல்லாமல் பயில வழிவகை செய்து கொடுக்கப்பட்டது. மேலும் பள்ளி மற்றும் உறைவிட இல்ல சுற்றியுள்ள பகுதிகளை சுத்தம் செய்து மாணவர்கள் தங்கு தடையின்றி பயிலவும் எந்தவொரு இடையூறு இல்லாமல் இருக்கவும் சுத்தம் செய்யப்பட்டுள்ளது.





**5. பள்ளி மற்றும் இல்ல பயன்பாட்டிற்கு வாங்கப்பட்ட வாகனங்கள்**

ஜெர்மனியின் ஆக்ஷன் இந்தியன் திட்டத்தின் வழியாக பள்ளி மாணவர்களை கிராமங்களில் இருந்து அழைத்து வர பள்ளி மினிபேருந்து பயன்பாட்டில் உள்ளது. மேலும் பள்ளி மற்றும் இல்ல பயன்பாட்டிற்கு இயக்குநர் அவர்களுக்கு புதியதாக மஹிந்திரா ஜுப் வாங்கப்பட்டுள்ளது.

## 6. இத்தாலி கத்தோலிக்க ஆயர் பேரவையின் (IBC) நலிவடைந்த பெண்களுக்கான சுகாதாரம் மற்றும் தொழிற்பயிற்சி திட்டம்

கோவிட்-19 பெருந்தொற்றினால் பெரும் அவதிப்பட்ட கிராமங்களில் உள்ள பெண்களின் சுகாதாரம் மேம்படுத்தவும் இத்தொற்றினால் தங்களின் வாழ்வாதாரங்களை இழந்த கிராமப்புற மக்கள் மற்றும் புலம்பெயர்ந்தவர்கள் தொழிற்பயிற்சி மூலம் தங்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தி கொள்ள வேண்டும் என இத்தாலி கத்தோலிக்க ஆயர் பேரவை மூலம் இத்திட்டம் இலக்கு கிராமங்களில் செயல்படுத்தி வருகின்றது. இதுவரை இத்திட்டத்தின் வழியாக நடைப்பெற்ற பயிற்சிகள் மற்றும் பயனாளிகளின் விவரங்கள் கீழ்க்கண்டவாறு.

**The activities covered can be broadly listed under the following Heads**

- **Initial start-up trainings**
  Capacity building Training for Staff;
  Health support Training for select team;
  Community health workers' (CHWs) training;
- **Non-recurring operational costs**
  Purchase of medical kits for supply to CHWs;
  Purchase of Sewing machines for two of IGP Trainings;
  Purchase of Master Computer and spares for BCA training batches;
  Purchase of minimum Office furniture;
  Purchase of Milch Animals/ Poultry for one of the training;
  **Note:** All the above were supported by proforma estimates and approved by CEI.
- **Health Awareness Camps and Nutritional demonstrations**
  Health camps 1 to 9 in nine select villages;
  Nutritional demonstrations 1 to 9 in those villages;
  Repeat Health camps 10 to 18 in those same villages to assess Pathological follow up;
  Second level Nutritional demos 10 to 18 to eradicate malnutrition factors totally;
- **Income generating projects (IGPs) Training in 6 sectors**
  Basic computer Awareness (BCA) training in 3 batches
  Aari Embroidery Work (AEW) training in 3 batches
  Artificial Jewellery making (AJM) training in 3 batches
  Basic tailoring/Sanitary Napkins making training in 3 batches
  Jute bags/products making Training in 3 batches
  Rearing of Milch animals/ poultry Keeping Trainings in 6 batches
- **Essentials for Project office**
  Office rent, EB and office supplies;
  Office core team remunerations;
  Consolidated monthly TA/DA to CHWs;









7. சி.ஆர்.டி.எஸ் - ன் சிறப்பு செயல்பாடுகள்:

1. டி.டி.கே மருத்துவமனை குடி மற்றும் போதை ஒழிப்பு விழிப்புணர்வு முகாம்:

சென்னை திருவான்மையூரில் உள்ள டி.டி.கே மருத்துவமனை சி.ஆர்.டி.எஸ் நிறுவனத்தோடு இணைந்து களப்பகுதிகளில் பணியாளர்கள் வழியாக ஒரு விழிப்புணர்வு முகாமிற்கு 50 நபர்கள் என மருத்துவமனை ஆலோசகர்கள் வந்திருந்து குடி மற்றும் போதை பழக்கத்தால் ஏற்படும் உடல் பாதிப்புகள்

மற்றும் சமுதாய சீர்கேடுகள் குறித்து பயிற்சி அளிக்கின்றனர். இவ்வாண்டு 110 நபர்கள் விழிப்புணர்வு பயிற்சி பெற்றுள்ளனர்.

| வ. எண் | தேதி | ஒன்றியம் | கிராமம் | பயிற்சியாளர் | பங்கு பெற்றோர் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|
| 1 | 20.08.25 | உத்திரமேரூர் | உத்திரமேரூர் | திரு. அஜித்<br>திருமதி. மெடில்டா | 46 |
| 2 | 20.08.25 | அச்சிறுப்பாக்கம் | செண்டிவாக்கம் | திரு. அஜித்<br>திருமதி. மெடில்டா | 64 |

## 2. இலவச மருத்துவ முகாம்

**ஹாண்ட் இன் ஹாண்ட்** நிறுவனத்தின் மூலம் ஒரகடம் கிராமத்தில் பார்வையற்ற மாற்றுத்திறனாளிகளுக்கு கண் மருத்துவ முகாம் நடத்தப்பட்டது. இம்முகாமில் 50 பார்வையற்ற மாற்றுத்திறனாளிகளுக்கு கண் பரிசோதனை செய்து அவர்களுக்கு கண் கண்ணாடி வழங்கப்பட்டது. மேலும் எஸ்.ஆர்.எம் மருத்துவமனை சி.ஆர்.டி.எஸ் நிறுவனத்துடன் இணைந்து கிராமப்புறங்களில் இலவச மருத்துவ முகாம் நடத்தி தருகின்றனர். இலவச மருத்துவ முகாம் தேவைப்படும் பகுதிகளுக்கு ஏற்ப நடத்தப்பட்டதில் இவ்வாண்டு பின்வரும் கிராமங்களில் நடைப்பெற்ற மருத்துவ முகாமில் 509 நபர்கள் சிகிச்சை எடுத்துக்கொண்டனர்.

| வ. எண் | ஒன்றியம் | கிராமம் | மருத்துவர்கள், உதவியாளர்கள் | பங்கு பெற்றோர் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| 1 | காட்டாங்குளத்தூர் | ரெட்டிபாளையம் | 15+9 | 96 |
| 2 | வாலாஜாபாத் | வையாவூர் | 12+9 | 160 |
| 3 | கடற்கரை | புதுப்பட்டிணம் | 13+7 | 126 |
| 4 | அச்சரப்பாக்கம் | உத்தமநல்லூர் | 12+8 | 127 |
| **மொத்தம்** | | | | **509** |





## 3. எஸ்.ஆர்.எம் சுபிக்ஷா மருத்துவ காப்பீடு:

களப்பகுதிகளில் வசிக்கும் மக்கள் உடல்நலம் பாதிப்பு மற்றும் மருத்துவ காரணங்களுக்காக சிகிச்சை பெறுவதற்கு சி.ஆர்.டி.எஸ் வழியாக 221 நபர்களுக்கு எஸ்.ஆர்.எம் சுபிக்ஷா மருத்துவ காப்பீடு அட்டை வாங்கி

தரப்பட்டுள்ளது. இவர்கள் மருத்துவ சிகிச்சைக்கு சென்றால் 50% கட்டணம் செலுத்தி சிகிச்சை பெற்றுக்கொள்ள முடியும்.

**4. கிராம சபா பங்கேற்றல்:**

மே 01, ஆகஸ்டு 15, அக்டோபர் 02, நவம்பர் 14, ஜனவரி 26 ஆகிய தேதிகளில் திட்ட கிராமங்களில் நடைபெற்ற கிராம சபா கூட்டத்தில் மக்கள் அமைப்புகள் கலந்து கொண்டு தங்களது அடிப்படைத் தேவைகளான இலவச பட்டா, சாலை, குடிநீர் வசதி, கழிவுநீர் கால்வாய், தனிநபர் கழிவறை, தொகுப்பு வீடு பெறுதல் ஆகியவற்றை குறித்து கிராமசபை கூட்டத்தில் மனுக்கள் கொடுக்கப்பட்டு அடிப்படை தேவைகள் நிறைவேற்றப்படுகிறது.



**5. இலவச பட்டா:**

திருப்போரூர் ஒன்றியம் ஒரகடம் கிராமத்தில் வீட்டுமனை பட்டா இல்லாமல் பல ஆண்டுகளாக வசித்து வருகின்றனர். சி.ஆர்.டி.எஸ் வழிகாட்டுதலில் செயல்படும் மகளிர் குழுக்களின் மூலமாக தொடர்ந்து செங்கல்பட்டு மாவட்ட ஆட்சியரிடம் மனு அளிக்கப்பட்டதன் அடிப்படையில் ஒரகடம் கிராமத்திலுள்ள 4 குடும்பங்களுக்கு 3 சென்ட் இலவச பட்டா வழங்கப்பட்டது.

**6. கல்லூரி மாணவர்களின் களப்பணி பங்கேற்பு:**

கல்லூரிகளில் சமூகப்படிப்பு பயிலும் மாணவ, மாணவிகள் சி.ஆர்.டி.எஸ் நிறுவனத்திற்கு களப்பணி அனுபவத்திற்காக ஆண்டுதோறும் வருவதுண்டு. இந்த ஆண்டு சென்னை கிறிஸ்தவ கல்லூரியிலிருந்து சமூகப்பணி 40 மாணவ, மாணவிகள் மற்றும் சமூகப்பணித்துறை பேராசிரியர் ஆகியோர் சி.ஆர்.டி.எஸ் நிறுவனத்திற்கு 24.07.2025 அன்று கள ஆய்வுக்காக வந்திருந்தனர். சி.ஆர்.டி.எஸ் நிறுவனத்தின் பணிகள், செயல்படுத்தப்படும் திட்டங்கள் குறித்து இயக்குநர் அருட்பணி. அகஸ்டின் தேவதாஸ் அவர்கள் மற்றும் காஞ்சிபுரம் ஒன்றிய ஒருங்கிணைப்பாளர் திருமதி. ஜுலியட் ஜரின் மாணவர்களுக்க விளக்கினார்கள். மேலும் எஸ்.ஆர்.எம் கல்லூரி மற்றும் அப்போலா கலை மற்றும் அறிவியல் கல்லூரி மாணவ, மாணவிகள் களப்பணி அனுபவத்திற்காக வந்திருந்து

பணியாளர்களுடன் இணைந்து சமூகப்பணியை ஆர்வத்தோடு கற்றுக்கொண்டதுடன் ஏழை, எளிய மக்களின் சுகாதார நலன் காக்கும் விழிப்புணர்வை மக்களுக்கு வழங்கினார்கள்.





எஸ்.ஆர்.எம் வேளாண்மை அறிவியல் கல்லூரி மாணவர்கள் கிராமப்புற வேளாண்மை பணி அனுபவத்திற்காக சி.ஆர்.டி.எஸ் நிறுவனத்தின் களப்பகுதியான காட்டாங்கொளத்தூர் ஒன்றியம் மேல்மணப்பாக்கம் கிராமத்திற்கு சென்று அங்குள்ள தோட்டப்பயிர்கள் பராமரிப்பு, கால்நடை வளர்ப்பு, கோழிப்பண்ணை ஆகியவற்றை பார்வையிட்டு கிராம மக்கள், மகளிர்குழு உறுப்பினர்கள், பள்ளி மாணவர்களிடையே இயற்கை விவசாயம், கால்நடைகள் வளர்ப்பின் முக்கியத்துவம், சுழற்சி முறையில் கழிவுகளை உரமாக்குதல், செயற்கை உரங்களின் பின்விளைவுகள், நெகிழியின் தீமைகள் குறித்து குறும்படம் வாயிலாக கருத்துக்களை விளக்கினார்கள். கிராமப்புற விவசாயிகளுக்கு மரக்கன்றுகளை வழங்கி இயற்கையை பேணிகாப்பதன் அவசியத்தையும் வலியுறுத்தி தங்கள் பயிற்சி அனுபவத்தை பகிர்ந்து கொண்டனர்.







**7. ஆண்டு பொதுக்குழு கூட்டம்:**

சி.ஆர்.டி.எஸ் நிறுவனத்தின் 35-வது ஆண்டு பொதுக்குழு கூட்டம் 19.07.2025 அன்று காலை 10.30 மணியளவில் சி.ஆர்.டி.எஸ் அறிவர் அம்பேத்கர் பயிற்சி

அரங்கில் சி.ஆர்.டி.எஸ் நிறுவன துணைத்தலைவர் அருட்பணி. எஸ்தாக்கியூஸ் அவர்களின் தலைமையில் நடைப்பெற்றது. பொதுக்குழு கூட்டத்தில் சென்ற ஆண்டு அறிக்கை, வரவு செலவு கணக்குகள் சமர்ப்பிக்கப்பட்டது. நிறுவனத்தின் வளர்ச்சி பணிகள், நிதிநிலை மேம்பாடு, தன்னிறைவு அடைவதற்கான முயற்சிகள், வங்கி தொடர்பான நிதிநிலை குறித்து பொதுக்குழு மற்றும் செயற்குழு உறுப்பினர்களின் ஆலோசனைகள் பெற்று திட்டங்களை செயல்படுத்திட கலந்தாலோசிக்கப்பட்டது. மேலும் சங்க பொறுப்பாளர்கள் புதுப்பித்தல் மற்றும் சி.ஆர்.டி.எஸ் நிறுவனத்திற்கு சொந்தமான கட்டிடங்கள் தொடர்பான குத்தகை விவரங்கள் குறித்து கலந்தாலோசிக்கப்பட்டது. சி.ஆர்.டி.எஸ் இயக்குநர் அருள்பணி. அகஸ்டின் தேவதாஸ் அவர்கள் இப்பொதுக்குழு கூட்டத்தை சிறப்பாக வழிநடத்தினார்.





**8. ஆகஸ்டு - 10 துக்க நாள்:**

10.08.2025 அன்று காலை 10 மணியளவில் புலிப்பாக்கம் பைபாஸ் - செங்கல்பட்டு வழி சாலையில் தொடங்கி பேரணியாக வந்து புனித சூசைப்பர் ஆலய வளாகத்தில் பொதுக்கூட்டம் நடைப்பெற்றது.

- பட்டியலின கிறித்தவர் இட ஒதுக்கீட்டை மறுக்கும் ஜனாதிபதி ஆணை 1950, பத்தி 3-ஐ உடனே நீக்கம் செய்யவும்,
- பட்டியலின கிறித்தவர்களை SC பட்டியலில் சேர்க்கவும்,
- நீதிபதி ரங்கநாத் மிஸ்ரா கமிஷன் அறிக்கையை அமல்படுத்தவும்,
- பட்டியலின கிறித்தவர்களை SC பட்டியலில் சேர்த்திட தமிழக அரசு சட்டமன்றத்தில் தீர்மானம் நிறைவேற்றி மத்திய அரசுக்கு அனுப்பவும் வலியுறுத்தி கருத்தரங்கம் நடைப்பெற்றது.

இந்நிகழ்வில் 300க்கும் மேற்பட்ட தாய்மார்கள் மற்றும் சி.ஆர்.டி.எஸ் பணியாளர்கள் பங்கேற்றனர்.






**9. சி.ஆர்.டி.எஸ் - கிறிஸ்து பிறப்பு விழா பகிர்வு**

ஒவ்வொரு ஆண்டும் சி.ஆர்.டி.எஸ் நிறுவனத்தின் கிறிஸ்து பிறப்பு விழா களப்பகுதி மக்களோடும் பணியாளர்களோடும் கொண்டாடப்பட்டு வருக்கின்றது. இந்தாண்டு காஞ்சிபுரம், செங்கல்பட்டு ஆகிய மாவட்டங்களில் சி.ஆர்.டி.எஸ் பணி கிராமங்களில் உள்ள 400 ஏழை, எளிய கிராம மக்களுக்கு கிறிஸ்து பிறப்பு முன்னிட்டு சேலை மற்றும் போர்வைகள் நமது மறைமாவட்ட ஆயர் தந்தை அவர்கள், ஒரு சில பங்கு தந்தையர்கள், பள்ளி தாளாளர்கள், குமிழி கிராமத்தை சேர்ந்த திரு. கார்த்திக் மற்றும் பிற தன்னார்வ உள்ளங்களின் உதவியால் வழங்கப்பட்டது.





**முடிவுரை:**

செங்கல்பட்டு கிராமப்புற மேம்பாட்டுச் சங்கம். கடந்த 35 ஆண்டுகளாக சமூகத்தில் மிகவும் பின்தங்கிய அடித்தட்டு மக்களுக்கும், ஒடுக்கப்பட்ட மக்களுக்கும், பணிகளைச் செய்து கொண்டு வருகின்றது. அதன் அனைத்து செயல்பாடுகளினாலும் ஏராளமான மக்கள் கல்வியிலும், பொருளாதாரத்திலும், சமூகத்திலும், உயர்ந்துள்ளனர்.

இந்நிறுவனத்தின் பல்வேறு வளர்ச்சிப்பணிகளில் உறுதுணையாய் இருந்து இந்நிறுவனத்தை வழிநடத்திவரும் நிறுவனத்தலைவர் மேதகு.ஆயர்.டாக்டர்.நீதிநாதன் அவர்களுக்கும், இந்நிறுவனத்தின் துணைத்தலைவராக இருந்து நிறுவனத்தின் செயல்பாடுகளை ஊக்குவிக்கின்ற துணைத்தலைவர் அருள்பணி. எஸ்தாகியூஸ் அவர்களுக்கும், பொருளர் அருள்பணி. ஆனந்தன் அவர்களுக்கும், ஆயரின் ஆலோசனைக்குழு உறுப்பினர்கள், பங்கு அருள்பணியாளர்கள், அருள்சகோதரிகள், இலக்கு

மக்கள், நன்கொடையாளர்கள், உபகாரிகளான காரிதாஸ் இந்தியா, கோல்பிங் இந்தியா, டாசோஸ், நாபின்ஸ் நுண்கடன் நிறுவனம், செங்கல்பட்டு மறைமாவட்டம், Miva Austria, Aktion Indien, Italian Bishop Conference மற்றும் இதர வங்கி நிறுவனங்கள், செயற்குழு உறுப்பினர்கள், பொதுக்குழு உறுப்பினர்கள், கூட்டமைப்பு பொறுப்பாளர்கள், மகளிர் குழு உறுப்பினர்கள் மற்றும் கடைநிலையில் உள்ள மக்களுக்காக சமூக பணியில் அயராது உழைத்துக்கொண்டிருக்கும் எம் நிறுவன பணியாளர்கள் அனைவருக்கும் சி.ஆர்.டி.எஸ் நிறுவனத்தின் நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறோம். நம் நிறுவனத்தலைவரோடு இணைந்து ஒன்றுசேர்ந்து கரம்கோர்த்து இந்நிறுவனத்தை உயர்த்துவோம். பொருளாதாரத்தில் நமது நிறுவனமும், நமது நிறுவனத்தோடு தொடர்புடைய அனைத்து மக்களும் தன்னிறைவு அடைய இணைந்து செயல்படுவோம்.

## சி.ஆர்.டி.எஸ் நிர்வாக குழு

| வ.எண் | பெயர் | முகவரி | பொறுப்பு |
|---|---|---|---|
| 1 | மேதகு.ஆயர்.நீதிநாதன் | செங்கல்பட்டு மறைமாவட்டம், ஆயர் இல்லம், திம்மாவரம், செங்கல்பட்டு மாவட்டம் - 603101 | நிறுவன தலைவர் |
| 2 | அருள்பணி. எஸ்தாகியூஸ் | செங்கல்பட்டு மறைமாவட்ட பொதுபதில்குரு,<br>ஆயர் இல்லம், திம்மாவரம், செங்கல்பட்டு மாவட்டம் - 603101 | துணைத் தலைவர் |
| 3 | அருள்பணி.ஆனந்தன் | செங்கல்பட்டு மறைமாவட்ட பொருளாளர் ஆயர் இல்லம், திம்மாவரம், செங்கல்பட்டு மாவட்டம் - 603101 | பொருளாளர் |
| 4 | அருள்பணி. அகஸ்டின் தேவதாஸ் | சி.ஆர்.டி.எஸ் இயக்குநர். செங்கல்பட்டு கிராமப்புற மேம்பாட்டுச் சங்கம், திம்மாவரம், செங்கல்பட்டு 603101 | செயலாளர் |
| 5 | திரு.செல்வராஜ் | ஆர்.என்.கண்டிகை கிராமம், காஞ்சிபுரம் மாவட்டம் | உறுப்பினர் |
| 6 | திருமதி.ஸ்டெல்லா | நெ.14/2, செல்லியம்மன் தேரடி தெரு, மதுராந்தகம், செங்கல்பட்டு மாவட்டம் 603306 | உறுப்பினர் |
| 7 | அருள்பணி.அந்தோணிராஜ் | புனித யூதா ததேயு திருத்தலம், வானுவம்பேட்டை, செங்கல்பட்டு மாவட்டம் | உறுப்பினர் |
| 8 | அருள்சகோதரி. நம்பிக்கை மேரி | புனித மரியாள் கன்னியர் மடம், செங்கல்பட்டு- 603101 | உறுப்பினர் |
| 9 | திரு. அந்தோணிதாஸ் | நெ.55,விப்பேடு, மேல்கதிர்பூர், காஞ்சிபுரம் மாவட்டம் - 603502 | உறுப்பினர் |
| 10 | திருமதி. கீதா | நெ.584/3, பாலமுருகன் தெரு, இருங்குன்றபள்ளி, செங்கல்பட்டு மாவட்டம் - 603002 | உறுப்பினர் |
| 11 | திரு. பெஞ்சமின் | நெ.74, புலிப்பாக்கம், தந்தை பெரியார் தெரு, செங்கல்பட்டு - 603002 | உறுப்பினர் |

Our Sincere Thanks to……….


Address: Chengalpattu Rural Development Society,
No: 199A/4, Kancheepuram High Road,
Thimmavaram, Chengalpattu District - 603101
Tamil Nadu, South India.

crdskanchi@gmail.com
crdschengai@rediffmail.com

www.crdschengai.com


crds chengai

crdskanchi

@crdschengai

CRDS DSSS